சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 12.11.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 24/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-11 |
| சாட்சியின் பெயர் | : | தெய்வநாயகி |
| கணவர் பெயர் | : | சரவணன் |
| கிராமம் | : | சந்திரசேகரபுரம் |
| தாலுக்கா | : | வலங்கைமான் |
| தொழில் | : | திருவாரூர் வருவாய் அலுவலரின் நேர்முக உதவியாளர் |
| வயது | : | 50 |

2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 12 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1 எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது திருவாரூர் வருவாய் கோட்ட அலுவலகத்தில் வருவாய் கோட்ட அலுவலரின் நேர்முக உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பாக கூத்தாநல்லூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் வட்டாட்சியராக பணியிலிருந்தபோது திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இருந்த கொடுத்த வேண்டுகோள் கடித்தின் அடிப்படையில் அத்திசோழமங்கலம் கிராமத்தை சேர்ந்த சங்கர் மகன் சூரியா என்பவருக்கு இந்து பறையன் என சாதி சான்றிதழ் வழங்கினேன். நான் வழங்கிய சாதி சான்றிதழ் **அ.சா.ஆ-8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>

நான் கொடுத்த அ.சா.ஆ-8 ல் மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இருந்து வரப்பட்ட விண்ணப்பத்தின் எண் பற்றிய விவரம் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் விண்ணப்பத்தின் அடிப்படையில் சூரியா என்ற நபரை அழைக்கவும் இல்லை. அவரை பற்றி விவரங்கள் அடங்கிய ஆவணங்கள் எதையும் பார்வை இடவில்லை என்றால் நான் கிராம நிர்வாக அதிகாரி மற்றும் வருவாய் ஆய்வாளர் ஆகியோர்களின் அறிக்கையின் அடிப்படையில் நான் சாதி சான்றிதழ் வழங்கினேன். நான் சரியாக விசாரணை செய்யாமல் சான்றிதழ் வழங்கியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.11.12 17:12:48 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.